# தனித்து ஒளிரும் நட்சத்திரம்!

**‘கலைஞர்’ என்றதும் தமிழகத்திலுள்ள அனைவருக்கும் சட்டென நினைவுக்கு வருவது கவிதை, நாடகம், நாவல், திரைக்கதை வசனம், கடிதங்கள்-தான். கலைஞர் என்றாலே எழுத்து இலக்கியம்தான். பேச்சாளர், முதலமைச்சர், தி.மு.க.வின் தலைவர் என்ற அடையாளங்களைக் காட்டிலும், அவருக்கு முதன்மையான அடையாளமாக இருப்பது அவரின் எழுத்தும், இலக்கியப் படைப்புகளும்தான். அதனால்-தான், ‘‘செங்கோலைவிட, எழுதுகோலே பெரியது, அதை என்னிடமிருந்து யாராலும் பிடுங்கிக்கொள்ள முடியாது’’ என்று எழுதியிருக்கிறார்.**



கலைஞருடைய எழுத்து வாழ்க்கை என்பது அவருடைய 14 வயதில் தொடங்கியது. நினைவு தவறும் வரை எழுதிக்கொண்டே இருந்தார். தன்னுடைய 14ஆவது வயதில், 1938ஆம் ஆண்டு அவர் எழுதிய முதல் கவிதையின் தலைப்பு ‘அணிவகுப்புப் பாடல்’.

**“வாருங்கள் எல்லோரும் இந்திப்**
**போருக்குச் சென்றிடுவோம் வந்திருக்கும்**
**இந்திப் பேயை விரட்டித் திரும்பிடுவோம்.**
**ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதில்லவே**
**வீரத் தமிழ் கொஞ்சும் நாட்டிலே நாங்கள்**
**சாரமில்லாச் சொற்கள் ஏற்க மாட்டோம் ஏட்டிலே”**

முதல் கவிதையே அவருக்கு ராஜபாட்டையாக அமைந்துவிட்டது. கணியன் பூங்குன்றன் எழுதிய, ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற கவிதை வரிகளுக்கு அடுத்து கலைஞர் எழுதிய ‘ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதில்லவே’ என்ற கவிதை வரிகள்தான் தமிழ்நாட்டில் அதிகம் பேசப்பட்டன. கலைஞரைப் பற்றி பேசுவோரும், தி.மு.க. மேடைகளில் பேசுவோரும் அதிகம் பயன்படுத்தியது இந்த வரிகளைத்தான்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்று சொன்னது கலைஞருக்கு மட்டும்தான் அப்படியே பொருந்தும். 14 வயதில் கவிதை எழுதுகிறார். அதே 14 வயதில் செல்வ சந்திரா என்ற நாவலை எழுதியிருக்கிறார். (அதன் முன்னுரை மட்டுமே கிடைத்திருக்கிறது.) 15 வயதில், 1941இல் ‘மாணவ நேசன்’ என்ற கையெழுத்துப் பத்திரிக்கையை நடத்துகிறார். 15 வயதிலேயே ‘பழனியப்பன்’ என்ற நாடகத்தை எழுதுகிறார். 18 வயதில் ‘இளமைப் பலி’ என்ற கட்டுரையை அண்ணா நடத்திய ‘காஞ்சி’ பத்திரிகையில் எழுதுகிறார். 18 வயதில் பள்ளியில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் தொடங்குகிறார். தொடக்க விழாவிற்காக 16 .11.1942இல் வாழ்த்துக் கவிதை எழுதிதர வேண்டும் என்று பாரதிதாசனுக்குக் கடிதம் எழுதுகிறார். 18 வயதிற்குள்ளாகவே கலைஞரிடமிருந்த சமூகப் போராளி, சீர்திருத்தவாதி, இலக்கிய, மொழி பற்றாளன், கவிஞன், நாடக ஆசிரியன், கட்டுரையாளன் வெளிப்பட்டு விடுகிறான்.

1944இல் சிதம்பரத்தில் நடைபெற்ற வர்ணாசிரம மாநாட்டிற்கு எதிராக கலைஞர் எழுதிய கவிதை இது:

**‘பரணி பல பாடி பாங்குடன் வாழ்ந்த**
**பைந்தமிழ் நாட்டில்**
**சொரணை சிறிதுமிலா சுயநலத்துப்**
**பேர்வழிகள் சிலர் கூடி**
**வருணத்தை நிலை நாட்ட வகையின்றிக்**
**கரணங்கள் போட்டாலும்**
**மரணத்தின் உச்சியிலே மானம் காக்க**
**மறத்தமிழா போராடு.’**

தன்னுடைய இனம் சீரழிந்து கிடக்கிறது. மொழி, இலக்கியம் சீரழிந்து கிடக்கிறது. அதற்காகப் போராட வேண்டும், தன்னுடைய போராட்டத்திற்கான ஆயுதம் பேனாதான், எழுத்துதான் என்று முடிவெடுக்கிறார். தன்னுடைய போராட்ட ஆயுதமான, போர் கருவியான பேனாவை எப்போதும் கூர்மையாகவே வைத்திருந்தவர். தன்னுடைய போர் கருவிக்கு ஒரு நாளும் ஓய்வு கொடுக்காதவர்.

கலைஞரின் எழுதுகோல் உருவாக்கியிருக்கும் அறிவுச் சுடர் தமிழ்ச் சமூகத்திற்கு என்றும் வழிகாட்டும் விளக்காக இருக்கும். அவரின் எழுத்துகள் வசதிக்காக, வாய்ப்புக்காக, சந்தர்ப்பவாதத்திற்காக ஒருநாளும் வளைந்துகொடுக்காதவை. வேத மரபிற்கு எதிரானவை. மக்கள் நலன் பேசியவை. தமிழர் நலன், திராவிடர் நலன் பேசியவை.

கலைஞர் எழுதிய எழுத்துகள், மனுவுக்கான விளக்க உரைகள் அல்ல, மனுநீதி வகுத்திருந்த நீதியைக் கிழித்தெறிவதற்காகத்தான் எழுதினார். அவர் மனுவைப் பின்பற்றி எழுதவில்லை. தமிழ்ப் பற்றையும் சுயமரியாதை உணர்வையும் உண்டாக்கவே எழுதினார். கலைஞரின் எழுத்து சமநீதிக்கானது, சமூக நீதிக்கானது.

“கொற்றக் குடையா, கொள்கையா என்றால், நான் கொள்கையைத்தான் ஏற்பேன்” என்று எழுதியவர்.

“என் ஒவ்வொரு அணுவும் என் இனத்தின் முன்னேற்றத்திற்காகவே அமையும். ஒவ்வொரு துளி வியர்வையும் என் நசுக்கப்பட்ட இனத்தின் பெருமையை வளப்படுத்தும். என் கண்ணீர், ரத்தம், மூச்சுக்காற்று, எலும்பு, தசை அனைத்தும் இந்த இனத்தின் முன்னேற்றத்திற்காக மட்டுமே அர்ப்பணிக்கப்படும்” என்று ‘நெஞ்சுக்கு நீதி’யில் எழுதியிருக்கிறார்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், திரைக்கதை வசனம் என்று எதை எழுதினாலும் அதில் தமிழனின் பெருமை, தமிழ் மொழியின் பெருமை, தமிழ் இலக்கியத்தின் பெருமையைப் பற்றிப் பேசாமல் இருக்க மாட்டார். அவருடைய கதாபாத்திரங்களின் பெயர்கள்கூட ‘நற்கண்ணை’, ‘பெருந்தேவி’, ‘ஐயை’, ‘கிள்ளி’, ‘செழியன்’ என்றுதான் இருக்கும்.

இலக்கிய வகைகளில் எந்த வடிவத்தில் எழுதினாலும், அவற்றில் தன் கருத்தை, அரசியலை, கொள்கைகளைச் சொல்லாமல் இருக்க மாட்டார். அதுதான் அவருடைய எழுத்தின் நோக்கம். தன்னுடைய நோக்கத்தில் அவர் வெற்றி பெறவும் செய்தார்.

தமிழ் மொழியின் பெருமையை, பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையை நேசித்தது மட்டுமல்ல, தன்னுடைய எழுத்தில் ஓயாமல் பதிவுசெய்துகொண்டேயிருந்தவர். தன்னுடைய எழுத்துக்கான ஆற்றலை அவர் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்துதான் பெற்றிருக்கிறார். தன்னுடைய படைப்புகளை முன்னிறுத்துவதைக் காட்டிலும், திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் சங்க இலக்கியத்தையும்தான் அவர் அதிகம் முன்னிறுத்தினார். கலைஞருடைய இலக்கிய மனம் என்பது இதுதான்.

‘தமிழ் வெல்லும்’ என்று எழுதியவர். கையெழுத்திடும்போதெல்லாம் ‘வாழ்க தமிழ்’ என்று எழுதி கையெழுத்துப் போடுவார். அவர் எழுதிய ‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’, ‘வீரன் சாவதே இல்லை. கோழை வாழ்வதே இல்லை’, ‘இன்றைய செய்தி, நாளைய வரலாறு’ ஆகிய சொற்றொடர்கள் அதிகம் கவனத்தை ஈர்த்தவை. முரசொலியைத் துண்டு அறிக்கையாக வெளியிட்டபோதே ‘தமிழ் வாழ்க, தமிழ் வளர்க’ என்று எழுதியவர்.

20ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் கலைஞரின் பங்கு மிக முக்கியமானது. அவர் அளவிற்குத் தமிழ்நாட்டின் சமூகச் சூழலை, அரசியல் சூழலை எழுதிய வேறு ஒரு எழுத்தாளனைக் காட்ட முடியாது. ‘கலைஞர்’ என்ற சொல் வேறு எந்தத் தமிழ் எழுத்தாளனுக்கும் பொருந்தாத மணிமகுடம்.

அவருக்கு எழுதுவதும் படிப்பதும்தான் வாழ்க்கை. கடைசிவரை தன் சிந்தனையை, எழுத்தை, தமிழ்ச் சமூக மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தவர். அவருடைய முக்கியமான படைப்புகள் குறித்து இனி பார்க்கலாம்.



எழுத்தாளர்
இமையம்

### கவிதைகள்

‘ஒரு இலக்கியப் படைப்பில், அழகியல், நுணுக்கம், கட்டமைப்பு, மொழிச் செறிவு, உள்ளடக்கம் போன்றவற்றுக்கு முன்னுரிமை கொடுப்பீர்களா? கருத்துக்கு முன்னுரிமை கொடுப்பீர்களா?’ என்று கலைஞரிடம் கேட்டால், ‘கருத்துக்குத்தான்’ என்று ஒரு நிமிடம்கூடத் தாமதிக்காமல் சொல்லியிருப்பார். தன்னுடைய அரசியலைப் பேசவும், தன்னுடைய அரசியல் எதிரிகளுக்குப் பதில் சொல்லவுமே கலைஞர் அதிகமான கவிதைகளை எழுதியிருக்கிறார்.

**“என் கவிதையில்**
**யாப்பின்றி போனாலும் போகட்டும்**
**நம் நாடு, மொழி, மானம் உணர்வெல்லாம்**
**காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கையென்றால்**
**வாய்ப்பின்றி போனாலும் செய்யுள் கற்கா**
**காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் நெஞ்சில்**
**ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாகி கொள்கை**
**மாறுகின்ற கோடாரிகள் உணர்வதற்கு ஒன்று**
**சொல்வேன்”** என்று தன்னுடைய கவிதைக்கான நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார். 7.11.1980இல் ‘சமுதாயப் பார்வைகள்’ என்ற கவிதையில் தமிழ் மொழிக்கு அவர் என்னவிதமான உயர்வைத் தருகிறார் என்பதைப் பார்க்க முடியும்.

**“வெறி நாயாக அலைந்தாலும்**
**‘தமிழ் தமிழ்’ என்று தானே குரைப்பேன் – என்**
**தாயாக இருக்கின்ற தமிழே – தொட்டில்**
**தாலாட்டாய் என்னை வளர்த்த தமிழே**
**ஊன் கலந்து உயிர் கலந்து**
**தேன் கலந்து பலாச்சுளைப்போல்**
**தித்திக்கும் தமிழே**
**வான்கலந்தே என் மூச்சு கரையுமட்டும்**
**நான் பிறந்த மண்ணுக்குக் கடமை செய்வேன்”**

தமிழ் மொழிமீதும், தமிழ் இலக்கியங்கள் மீதும் அவருக்கு இருந்த பற்றுதல், வெறி பிடித்த பற்றுதல். சத்தியம் செய்யும் போதுகூட அவர், தமிழ் மொழி மீதுதான் சத்தியம் செய்கிறார். தமிழைச் சாட்சியாக்கி சத்தியம் செய்கிறார். ‘உயிருள்ளவரை நான் பிறந்த மண்ணுக்குக் கடமை செய்வேன்’ என்று தமிழ் மொழியிடம் வாக்கு கொடுக்கிறார்.

கலைஞர் மொத்தம் 210 கவிதைகளை எழுதியிருக்கிறார். எதற்காக இவ்வளவு எழுதினார் என்று கேட்பவர்களுக்கு 14.4.1970இல் ‘வாழ்வென்னும் பாதையில்’ என்ற கவிதையே பதில் சொல்லிவிடுகிறது.

**“இருள் விலகி பொழுது விடியுமா?**
**ஏழை கின்னும் உதவிட முடியுமா?**
**பூதாகாரப் பேயிருள் விலகிவிட்டால்**
**தீதான தனிமையுடமைப் பற்றின்**
**சீரான பொதுவுடமைத் தத்துவங்கள்**
**ஏராளும் மனிதர் வாழ்வில்**
**தாராளமாயெங்கும் தங்கிடுமே.”**

திராவிட இயக்கக் கொள்கையை ஏற்றுக்கொண்டே அதே பிடிப்போடுதான் அவர் மார்க்சிய கொள்கையையும் ஏற்றுக்கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களின் நோக்கமும், கலைஞருடைய நோக்கமும் ஒன்றுதான், செயல்பட்ட விதம்தான் வேறு. “பெரியாரைச் சந்தித்திருக்காவிட்டால் நான் ஒரு கம்யூனிஸ்ட்டாகத்தான் இருந்திருப்பேன்” என்று அவரே பதிவுசெய்திருக்கிறார். தமிழ்ச் சமூக மேம்பாடுதான் கலைஞரின் லட்சியம். அந்த லட்சியத்தைப் பிரதிபலித்த, லட்சியத்தை நோக்கிய பயணம்தான் அவருடைய கவிதைகள்.

கலைஞர் சூழலுக்கேற்ப, அரசியல் நிகழ்வு களுக்கேற்ப பல கவிதைகளை எழுதியிருக்கிறார். சமூகத்தில் தனக்குப் பிடிக்காத விஷயம் எது நடந்தாலும் அதைப் பற்றி கவிதை எழுதிவிடுவார். அவர் தனித்தனியாக எழுதிய கவிதைகளின் எண்ணிக்கையைவிட கவியரங்கங்களில் பாடிய கவிதைகளின் எண்ணிக்கைதான் அதிகம். இராவணன் பற்றி, இந்திர ஜித், இரணியன், வாலி பற்றியெல்லாம்கூட நீண்ட கவிதை எழுதியிருக்கிறார்.

“.. தமிழ்
மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன்
உருவில் சிங்கம், உண்மைத் தங்கம் - யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான் - மலைத் தமிழன்”

என்று இராவணன் பற்றி எழுதியிருக்கிறார். இராவணன் தமிழன் என்று நிரூபிக்க வேண்டும். தமிழன் பண்பில், வீரத்தில் சிங்கம் என்று நிரூபிக்க வேண்டும். ‘தமிழன் தலை தாழ மாட்டான்’, ‘தலை தாழ்ந்தாலும் தமிழன் வாழ மாட்டான்’ என்று எழுதியவர்தான். இராவணன் பற்றிய கவிதையில் மட்டுமல்ல, இலங்கையைப் பற்றிய கவிதையில்:

“மண்ணெல்லாம் வீரம் துள்ளும் மாதர்
கண்ணெல்லாம் கற்பு சொல்லும்
விண்ணிலே ஏறுகின்ற
கொடி நிழல் பகையை வெல்லும்”
என்று எழுதியிருக்கிறார்.

இந்தக் கவிதையில் கலைஞர் முன்வைப்பது திராவிட, ஆரிய அரசியல்தான். தான் எழுதுகின்ற ஒவ்வொரு சொல்லையும், ஒவ்வொரு வாக்கியத்தையும் அரசியலாக எழுதினார். தன்னுடைய எழுத்தை அரசியல் நடவடிக்கையாக மாற்றினார்.

காந்தி இறந்தபோதும், நேரு, காமராஜர், நேதாஜி போன்ற அரசியல் தலைவர்கள் இறந்தபோதெல்லாம் அரசியல் பகையை, கொள்கை பகையை மறந்து இரங்கற்பா எழுதியிருக்கிறார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இறந்தபோதும், சர். ஏ.டி.பன்னீர் செல்வம் இறந்தபோதும், முக்கியமான கட்சிக்காரர்கள் இறந்தபோதும் இரங்கற்பா எழுதியிருக்கிறார். கலைஞர் எழுதிய இரங்கற்பாவிலேயே உச்சம் தொட்டதும் , இன்றும் பலராலும் நினைவுகொள்ளப்படுவதும், அவருடைய சொல்லாட்சித் திறனுக்கு உதாரணமாக இருப்பதும் அண்ணாவின் மறைவின்போது அவர் எழுதிய இரங்கற்பாதான்.

“நீ இருக்குமிடந்தேடி யான் வரும்வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா” என்று 9.6.1969இல் எழுதினார். கவிதையாக என்ன எழுதினாரோ அதுதான் நடந்தது. தன்னுடைய அண்ணனுக்கு அருகிலேதானே இப்போது இருக்கிறார். ‘ஓய்வறியாமல் உழைத்தவன் இங்கே உறங்குகின்றான்’ என்று தன்னுடைய கல்லறைக்கான வாசகத்தையும் தானே எழுதியவர். எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எத்தனையோ ஆசைப்படலாம். ஆசைப்பட்டவர்களுக்கெல்லாம் ஆசைப்பட்டதெல்லாம் சாத்தியமானதா? கலைஞர் ஒருவருக்கு மட்டும்தான் சாத்தியப்பட்டது. 9.2.1969இல் இதயத்தைத் தந்திடண்ணா கவிதையில் என்ன எழுதினாரோ அது 7.8.2018இல் சாத்தியப்பட்டது. அதாவது 49 ஆண்டுகள் கழித்து. நிஜமான எழுத்தாளன் என்ன எழுதுகிறானோ அது நடக்கும் என்பதற்கு கலைஞரின் கவிதையே உதாரணம்.

யாப்பிலக்கணம் தெரிந்தவர்களால் மட்டும்தான் பொருளமைதியுடன் சொல்லமைதி, யாப்பமைதி, கவியமைதியுடன் கவிதை எழுத முடியும் என்றிருந்த நிலையை மாற்றி வாழ்க்கை நெருக்கடியே ஒருவனை கவிதை எழுத வைக்கும், அப்படி எழுதப்பட்ட கவிதையும் மேம்பட்டதாக இருக்கும், காலம் கடந்து நிற்கும் என்பதற்கு கலைஞரின் கவிதைகளே சாட்சியாக இருக்கின்றன.

### சிறுகதைகள்

கலைஞர் 76 சிறுகதைகளை எழுதியிருக்கிறார். அவருடைய கடைசி சிறுகதை ‘16 வயதினிலே’ . பழந்தமிழ் இலக்கியங்களை எவ்வளவு படித்திருந்தாரோ, அதே அளவுக்குப் புராண, இதிகாசக் கதைகளையும் படித்திருக்கிறார். புரண, இதிகாசக் கதைகள் எப்படி அறிவியலுக்கு, பகுத்தறிவுக்கு ஒவ்வாத வகையில் இருக்கிறது என்பதைக் காட்ட, அவர் ‘நளாயினி’, ‘ஒரிஜினலில் உள்ளபடி’ என்ற இரண்டு சிறுகதைகளை எழுதியிருக்கிறார். நளாயினியின் கதை அனைவரும் அறிந்ததே. அந்தக் கதையை கலைஞர் எப்படி மாற்றி எழுதியிருக்கிறார் என்பதையும், பெண்ணடிமைத் தனத்தைப் புராண இதிகாசங்கள் எப்படிச் சமூக நியதியாக மாற்றி அநீதி இழைத்துக்கொண்டிருக்கின்றன என்பதையும் ‘நளாயினி’ கதையில் தெளிவாக அறிய முடியும்.

“பெரிய மனுஷன், ‘பெரிய ஆள்’, ‘பெரிய செல்வந்தன்’, ‘பெரிய பண்ணையார்’ என்பது போல ‘பெரிய’ வியாதி என்று ஒன்று உண்டோ. அந்தப் பெருவியாதியால் பீடிக்கப்பட்டவர் அந்தப் பெரிய மகான். அவர்தான் தன்னுடைய மனைவியின் தலையில் ஏறிக்கொண்டு தெருவில் போகிறார்.”

“கணவனைத் தாசி வீட்டுக்கு அழைத்துவரும் மனைவியை இன்றுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன்” என்று தாசி சொல்வதாக எழுதியிருப்பார். நளாயினியின் கதையின் மூலமாக பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பெண்ணடிமைத்தனத்தைப் போற்றுகின்ற, புராண, இதிகாச, கற்பனைக் கதைகளின் மீதான தன்னுடைய விமர்சனத்தை கதையாக மாற்றியிருக்கிறார். கதையில் வறட்டுத்தனமான கேள்விகளை எழுப்பாமல் கதையின் போக்கிலேயே சில உண்மைகளைச் சொல்லிவிடுகிறார். இப்போது படிக்கும்போதுகூட ‘நளாயினி’ சிந்திக்கும்படியாக இருக்கிறது.

பாரதக் கதையில் வரும் பெண் நளாயினியைப் பற்றி விமர்சித்து எப்படிக் கதை எழுதினாரோ அதே மாதிரி மகாபாரதத்தில் வரும் பாஞ்சாலியைப் பற்றியும் ஒரு கதை எழுதியிருக்கிறார். பெயர், ‘ஒரிஜினலில் உள்ளபடி’. அச்சகத்தில் கம்போசராக வேலை செய்யும் கந்தசாமிக்கும், திரௌபதி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகத்திற்கு நோட்டீஸ் அச்சடிக்க வரும் ராமநாதன் செட்டியாருக்குமிடையில் என்ன நடக்கிறது என்பதுதான் கதை. கந்தசாமியைப் பற்றி எழுதும்போது, ‘எடு வாளை என இறுமாந்து உரைக்கும் பண்டைய திராவிடப் போர் வீரனைப் போல நின்றான்’ என்று எழுதுகிறார். ராமநாதன் செட்டியாரைப் பற்றி எழுதும்போது, “கொள்ளையடிக்கிற செட்டியார் செய்கிறானாம் கும்பாபிஷேகம்” என்று சொல்கிறார்.

“ஸ்ரீஜகத் யோகானந்த சுவாமிகள் பாஞ்சாலி சுயவரம் என்பது பற்றி உபன்யாசிப்பார்கள்” என்று அச்சுக் கோர்ப்பதற்குப் பதிலாக கந்தசாமி, “ஸ்ரீஜகத் போகானந்த சுவாமிகள் பாஞ்சாலி விபச்சாரம் என்பது பற்றி உடன் யாசிப்பார்கள்” என்று ஏன் அச்சு கோர்த்தார்? கதையின் கடைசியில், ‘பாரத ஒரிஜினலில் ஐவருக்குத் தேவியாகவும், ஆறாவதாக கர்ணன் மேல் ஆசை கொண்டவளாகவும்தான் பாஞ்சாலி சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். அந்த இலட்சணப்படி பாஞ்சாலி சுயம்வரத்தைவிட, பாஞ்சாலி விபச்சாரம் என்று போடுவதுதான் எனக்குச் சரியான ஒரிஜினலாகத் தெரிந்தது” என்று கந்தசாமி சொல்கிறார். கதையில் பேசுவது கந்தசாமியா? கலைஞரா? இந்தக் கதையில் கலைஞர் உச்சபட்சமாகப் பேசியிருப்பார். “நானும் இந்த பிரசுக்கு வந்து ஐந்து வருசமாயிற்று. இந்த ஆபாசம் பிடித்த புராணக் குப்பைக்கு அச்சுக் கோப்பதைவிடத் தூக்குமாட்டிக்கொள்வது எவ்வளவோ மேல்” என்று கந்தசாமி புலம்புவதாக எழுதியிருப்பார். எதற்காக ‘ஒரிஜினலில் உள்ளபடி’ என்ற சிறுகதையை எழுதினார் என்பதும் தெளிவாகிறது. கலைஞரைப் புரிந்துகொள்வதற்கு, அவருடைய, நோக்கத்தை, லட்சியத்தைப் புரிந்துகொள்வதற்கு அவருடைய சிறுகதைகள் நிச்சயம் உதவும்.

**கலைஞருடைய சிறுகதைகளைப் பொறுத்தவரையில் சாதி, மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மூட நம்பிக்கைகள் போன்ற சமூகக் கட்டுமானங்களின் மீது கூர்மையான விமர்சனங்களை முன்வைத்து, சமூக மேன்மைக்கு எது மேலானது, எது கீழானது என்பதை விளக்கிக் காட்டுவதுதான். 1945இல் அவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பான ‘கிழவன் கனவு’ வெளிவந்திலிருந்து அவருடைய கடைசி சிறுகதைவரையிலும் கதைகளின் மையக் கருத்தில் மாற்றமில்லை. சமூக நிலை, சமூக அரசியல், சமூகச் சீர்த்திருத்தம், பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு, தேசிய உணர்வுக்கு மாற்றாகத் தமிழ் உணர்வு, இன உணர்வு என திராவிட அரசியல்தான் கலைஞரின் சிறுகதைகளில் மட்டுமல்ல அவருடைய மொத்த எழுத்துகளின் சாராம்சம்**

அவருடைய சிறுகதைகளில் உரையாடல்கள் மிகுந்து காணப்படுவதற்கு அவர் திரைக்கதை வசனம் எழுதியது காரணமாக இருக்கலாம். தான் விரும்புகிற கருத்தை, கொள்கையை, அரசியலை விவரிப்புகளின் வழியே சொல்வது சாத்தியமில்லை, உரையாடல்களின் வழியே சொல்வதுதான் சரியானது என்று கருதியிருக்கலாம். தன் கருத்துகளுக்குக்கேற்ப கதையின் மையத்தையும், கதாபாத்திரங்களையும் உருவாக்கி, அதை அவர்களுடைய கருத்துக்களாக, விருப்பங்களாக மாற்றுவதுதான் இயல்பானது. அதைத்தான் கலைஞரும் தன் கதைகளில் செய்திருக்கிறார்.

தமிழ்நாட்டின் வாழ்க்கைச் சித்திரங்கள்தான் கலைஞருடைய சிறுகதைகள். கலைஞர், அரசியலை இலக்கியமாக்கியவர். இலக்கியத்தை அரசியலாக்கியவர்.

### நாவல்கள்

கலைஞர் முதன்முதலாக எழுதிய நாவல் ‘செல்வ சந்திரா’. இந்த நாவல் இதுவரை அச்சாகவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை. 19371938இல் அந்த நாவலுக்கு எழுதிய முன்னுரை மட்டும் இருக்கிறது. கலைஞரின் நாவல்களில் அச்சானவைகளைக் கால வரிசைப்படிப் பார்த்தால் 1947இல் வெளிவந்த ‘பலிபீடம் நோக்கி’ அவர் எழுதிய முதல் நாவல். அதன் பிறகு 1953இல் ‘பெரிய இடத்துப் பெண்’, ‘நடுத்தெரு நாராயணன்’ என இரண்டு நாவல்களை எழுதியிருக்கிறார். அடுத்த பத்தாண்டுகளில் அவர் நாவல் எதையும் எழுதவில்லை. 1963இல் ‘சாரப்பள்ளம் சாமுண்டி’ என்ற நாவலை எழுதியிருக்கிறார். 1963க்குப் பிறகு இரண்டு, மூன்று ஆண்டுகள் இடைவெளியில் பல நாவல்களை எழுதியிருக்கிறார்.

கலைஞர் எழுதிய மொத்த நாவல்களின் எண்ணிக்கை 16. அவற்றில் சமூக நாவல்கள் 10, தென்பாண்டிச் சிங்கம் (1963), பாயும் புலி பண்டாரக வன்னியம் (1971), பொன்னர் சங்கர் (1986), ரோமாப்புரி பாண்டியன் (1974) ஆகியவை. வரலாற்று நாவல்கள், சமூக நாவல்கள் என்ற பெயரில் எழுதினாலும், வரலாற்று நாவல்கள் என்ற பெயரில் எழுதினாலும் நாவல்களின் மையப் பொருள் தமிழ்ச் சமூக மேம்பாடு, புராண, இதிகாச, மூடநம்பிக்கை எதிர்ப்புதான்.

.... தொடரும்...